களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

Vol. 6 No. 02, August 2026, p523-540 | Available online at: www.tamilmanam.in
Original Research Paper

அகநானூற்றில் குறுநில மன்னர்கள்
Chieftains in Akananuru

முனைவர் அ. சங்கீதா,,
M.A., M.Phil., Ph.D, *உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,*
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சி – 620 002.
Dr. A. Sangeetha*,
M.A., M.Phil., Ph.D., Assistant professor, Department of Tamil,
Shrimathi Indira Gandhi College, (Affiliated with Bharathidasan University),
Tiruchirappalli–2. Tamil Nadu, India.
Phone: +91 9626382433 | Email: sangeetha@sigc.edu | **ORCID:** 0009-0009-6203-7769

Article history
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 27-08-2026
Published: 28-08-2026
*Corresponding Author
Email:
sangeetha@sigc.edu

Abstract: Sangam literature stands as a treasure trove of historical records depicting ancient Tamil society, where minor chieftains (Kurunila Venthar) ruled autonomous territories alongside the primary three crowned dynasties—the Cheras, Cholas, and Pandyas. Clans such as the Velir and Kosar migrated from the north to settle in Tamilakam, playing a vital role in local governance and moral leadership. Focus modern research on Akananuru, one of the Eight Anthologies (Ettuthokai), reveals mentions of over a hundred rulers and patrons including prominent Chera monarchs like Uthiyan Cheralathan, Imayavaramban Neduncheralathan, and Palyanai Selkezhukuttuvan, alongside chieftains such as Thithiyan, Nannan, Pari, and Kari. This research paper evaluates the governance, valor, patronage of poets, and generosity of twelve specific chieftains featured in Akananuru—Akuthai, Aai Andiran, Athiyan, Aviyan, Ezhini, Thithiyan, Nannan, Athiyaman Neduman Anchi, Aathan Ezhini, Evvi, and Ori. Furthermore, the study offers a comparative analysis of the philanthropic virtues of the Last Seven Great Patrons (Kadayezhu Vallalgal)—Pari, Kari, Aai, Athiyaman, Began, Nalli, and Ori—while exploring historical theories regarding the origins of the Velir clan to contextualize the status and contributions of local chieftains within the ancient Tamil political landscape.

Keywords: *Emotional Intelligence, Meyppatu (Theory of Emotive Expression), White Pearls, Meat Preparation, Red-Handed Warriors, Rainwater on Red Soil, Akam and Puram Poetic Conventions.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலம் தமிழரின் வரலாற்றுப் பெட்டகமாக இலக்கியங்கள் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் தமிழகம் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது என்றும், அவர்களின் ஆட்சிக்கு இடையே குறுநில வேந்தர்களும் தன்னாட்சி நடத்தி வந்தனர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. குறுநில வேந்தர்கள் என்று கூறப்படும் வேளிர், கோசர் போன்றோர் தமிழகத்தின் வடதிசையில் இருந்து வந்து குடியேறினர். மக்களின் வாழ்வினை நல்வழிப்படுத்தச் சிறந்த மன்னர்கள் சான்றாக விளங்கி உள்ளனர். சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் குறுநில வேந்தர்களின் சிறப்பு உள்ளது. உதியன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், திதியன், நன்னன், பாரி, காரி முதலான நூற்றுக்கு மேற்பட்ட அரசர்களையும் வள்ளல்களையும் குறிப்பிட்டு இருக்கின்றது. குறுநில அரசர்களும் பெருவேந்தருக்கு நிகரான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். அவர்களின் ஆட்சிமுறையினை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது. மேலும், அகநானூற்றில் இடம்பெறும் அகுதை, ஆய் அண்டிரன், அதியன், அவியன், எழினி, திதியன், நன்னன், அதியமான் நெடுமான் அஞ்சி, ஆதன் எழினி, எவ்வி, ஓரி ஆகிய பதிற்றுவர் குறுநில மன்னர்களின் வீரம், கொடைச்சிறப்பு, புலவர் ஆதரவு ஆகியவற்றை ஒப்பீட்டு நோக்கில் இக்கட்டுரை ஆராய்கின்றது. கடையெழு வள்ளல்கள் எனப் போற்றப்படும் பாரி, காரி, ஆய், அதியமான், பேகன், நள்ளி, ஓரி ஆகியோரின் கொடைப்பண்பையும், வேளிர் குடியினரின் தோற்றம் தொடர்பான வரலாற்றுக் கருத்துகளையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்து, சங்ககால அரசியல் அமைப்பில் குறுநில மன்னர்களுக்கு இருந்த இடத்தையும் பங்களிப்பையும் மதிப்பீடு செய்கின்றது.

முதன்மைச் சொற்கள்

அகநானூறு; குறுநில மன்னர்கள்; வேளிர்; கடையெழு வள்ளல்கள்; சங்க இலக்கியம்; கொடைப் பண்பாடு; வரலாறு

1. முன்னுரை

சங்க காலத்தில் தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து காணப்பட்டது. இவர்களின் கீழ் குறுநில மன்னர்களும் ஆண்டு வந்தனர். மேற்குக் கடற்கரைப்பகுதி சேர நாடு என்றும், கிழக்குக் கடற்கரையின் வடபகுதி சோழ நாடு என்றும், அதன் தென் பகுதி பாண்டிய நாடு என்றும் வழங்கப்பட்டன. அவற்றை முறையில் குறுநில வேந்தனும் தன் ஆட்சியை செலுத்தி வந்தனர்.

சங்க இலக்கியத் தொகுப்பு மரபிலேயே இந்த அரசியல் படிநிலை பிரதிபலிக்கிறது எனலாம். புறநானூறு தொகுக்கப்பட்ட முறையை ஆராயும்போது, முதலில் முடிமன்னர் மூவரையும், அடுத்து குறுநில மன்னர்களையும் வேளிரையும் பற்றிய பாடல்களும், அதைத் தொடர்ந்து போர்,

கையறுநிலை, நடுகல் தொடர்பான பாடல்களும் இடம்பெற்றுள்ளதாகத் தமிழ் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் ("புறநானூறு"). இதிலிருந்து மூவேந்தர்களுக்கு அடுத்த நிலையில் குறுநில மன்னர்களுக்கு இலக்கியத்தில் தனி இடம் இருந்தமை தெளிவாகிறது. அகநானூறு நானூறு பாடல்களைக் கொண்டு, நூற்று நாற்பத்து நான்கு புலவர்களால் பாடப்பெற்று, களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை என மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது ("அகநானூறு"). இம்மூன்று பிரிவுகளிலும் சிதறிக் கிடக்கும் குறுநில மன்னர் தொடர்பான குறிப்புகள் இக்கட்டுரையின் முதன்மை ஆய்வுப் பொருளாக அமைகின்றன.

2. ஆய்வு நோக்கமும் அணுகுமுறையும்

மூவேந்தர் அல்லாத சங்க கால அரசர்களை மன்னர்கள் என்று அழைக்கப்படுவார். இவர்களைச் சிற்றரசர்கள் என்றும், குறுநில மன்னர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். இளவரசர்கள், அரசியர், கிழான் போன்ற ஊர்ப் பெருந்தனக்காரன், படை வீரர்கள், வள்ளல்கள், சிறப்புக்குரியோர் போன்ற சேர சோழ பாண்டியர் அல்லாத சங்ககாலத் தனிமனிதனைக் குறிக்கும் பெயர்கள். சங்க இலக்கியத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் அவர்களுடைய அரசியல் வரலாற்றைத் தமிழ்மொழியில் சிறப்பித்துள்ளனர். அகநானூற்றில் பத்திற்கு மேற்பட்ட குறுநில அரசன் புகழ்பெற்று விளங்கியுள்ளனர். இக்கட்டுரையில் அகுதை, ஆய் அண்டிரன், அதியன், அவியன், எழினி, திதியன், நன்னன், அதியமான் நெடுமான் அஞ்சி, ஆதன் எழினி, எவ்வி, ஓரி ஆகிய பதிற்றுவரும் தனித்தனி உட்தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றனர். மேலும், இவர்களுள் கடையெழு வள்ளல்கள் என வழங்கப்படும் மரபுடன் தொடர்புடையோரை ஒப்பீட்டு நோக்கில் வைத்து ஆய்வு செய்யப்படுகின்றது.

3. ஆய்வின் பயன்

புலவர்கள் சங்கத்தில் வீற்றிருந்து தமிழை ஆராய்ந்ததுடன் பல நூல்களை இயற்றினர். அதோடு மட்டுமல்லாமல் பிற புலவர்கள் இயற்றிய நூல்களை மதிப்பீடு செய்தும் வந்தனர். இதில் அமர்ந்திருந்த புலவர்கள் பல இலக்கியங்களைத் தமிழில் படைத்துத் தமிழ் மொழியின் மேன்மையை உலகிற்கு உணர்த்தினர். சங்க கால மன்னர்களை இமயம் வரை படையெடுத்து வெற்றி வாகை சூடினர். இவற்றை மாணவர்கள் கற்கும்போது மன்னரின் மேன்மை உணர முடியும். அகநானூற்றில் இம்மன்னரின் பண்புகளை படிக்கும்போது வீரம், கொடை, அரசியல் வாழ்வை அறிந்து கொள்ள முடியும்.

4. வேளிர் குடியினர்: தோற்றமும் வரலாற்றுப் பின்னணியும்

4.1 வேளிர் – பொதுவான குறிப்புகள்

வேளிர் என்பவர்களைப் பற்றிப் பலதரப்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. இவ்வேளிர் வடதிசையிலிருந்து அகத்தியருடன் தமிழகம் வந்து 18 குடிகளாக அமர்ந்தனர் என்றும், சேர, சோழ, பாண்டிய பேரரசுகள் தோன்றிய காலம் முதற்கொண்டே அமைந்திருந்தனர் என்றும் கூறுவர். இவர்களின் முன்னோர் திருமால் வழிவந்தவர் என்றும் கூறுவர். எவ்வாறு எனில் வடதிசையில் உள்ள துவாரகை என்னும் ஊரிலிருந்து வந்தவர்கள் என்றும் கூறுவர். பெரும்பாலும் மலைப்பகுதிகள் அவர்களது ஆட்சியின் கீழ் இருந்தன. அங்குச் செல்வம் மிக்க நகரங்கள் இருந்தன. நகரங்களைச் சுற்றிக் கோட்டைகள் எழுப்பப்பட்டிருந்தன. குறுநில மன்னர்களான வேளிர் இலக்கியத்தையும், கலையையும் போற்றி ஆதரித்தனர். கொடையில் நிகரற்று விளங்கினர். பாரி, காரி, ஓரி, பேகன், ஆய், அதிகமான், நள்ளி ஆகிய கடை ஏழு வள்ளல்கள் வேளிர்கள் ஆவர்.

4.2 வேளிர் தோற்றம் தொடர்பான கூடுதல் ஆய்வுக் கருத்துகள்

இக்கருத்தை ஆதரிக்கும் வகையில் சில ஆய்வாளர்கள், வேளிர் குலத்தவர் மகாபாரதப் போருக்குப் பின்னர் கடல்வழியே தென்னாட்டில் குடியேறிய யாதவர் வழிவந்தோர் எனவும், “வேந்தரும் வேளிரும்” என்னும் இணைச்சொல் சங்க இலக்கியத்தில் மூவேந்தருக்கு அடுத்த நிலையில் வேளிரின் அரசியல் அந்தஸ்தைக் காட்டுவதாகவும் விளக்குகின்றனர் (“வேளிர்களின் பூர்விகம்”). வேளிர் குடியினரின் இந்த வட இந்தியத் தொடர்பு பற்றிய கருத்து இன்றும் விவாதத்திற்குரியதாகவே உள்ளது; சில ஆய்வாளர்கள் இதனைப் புராண மரபுத் தொன்மமாகவே கருதுகின்றனர். எனினும் வரலாற்று நோக்கில், வேளிர் குடியினர் தமிழகத்தின் மலைப்பகுதிகளை மையமாகக் கொண்டு, பொருளாதார வலிமையும் இலக்கியப் புரவலர் பண்பும் கொண்டு விளங்கியிருந்தமைக்கு அகநானூறு உள்ளிட்ட சங்க நூல்கள் சான்றாக அமைகின்றன.

5. அகநானூற்றில் இடம்பெறும் குறுநில மன்னர்கள்



Palm-leaf manuscripts preserve Sangam history.
Source: Marquardt_Photography / Getty Images

5.1 அகுதை

கூடல் நகர அரசன். இவனது கூடல் வைகை அணைக்கு அருகே உள்ள கூடலூர். நான்மாடக் கூடலாகிய மதுரை புலிமான் கோம்பை சங்ககால

கல்வெட்டுக் குறிப்பிடும் கூடல், ஆகுதை மன்னனது கூடலே என்று ஆய்வுகள் கூறுகின்றன. வராகநதி வைகையோடு கூடும் இடத்தில் உள்ள குள்ளப்புரமே ‘கூடல்’ என்று பாண்டியர் கால கல்வெட்டுகள் குறிப்பிடுகிறது. வேள் மகளிரின் துன்பம் போக்கிய இவன் வேளிர் குடியைச் சேர்ந்தவன். அஃதை கோசர்குடி அரசன். இந்த அரசன் வேளாளர் குடியை சேர்ந்தவன் என்ற குறிப்பும் உள்ளது. அகுதை என்ற பெயரை விரும்பி சூடிக் கொண்டனர்.

பாழி இயற்கையாகவே கடவுள் பாதுகாப்புள்ள ஒரு நகரம். அணங்குத் தெய்வமும் பாதுகாக்கிறது என்று நம்பப்படும் நகரம். இந்த நகரில் வேளிர் குலத்தவரின் முதுகுடியினர் தாங்கள் சேமித்த செல்வத்தை வைத்துப் பாதுகாத்து வந்தனர். அந்தச் செல்வத்தைப் பிறரால் அடைய முடியாதது போல இவளும் அடைய முடியாதவள். நெஞ்சே! அவளை நாம் வருந்துகிறோம்.

“தேம்பினை வாழி, என் நெஞ்சே! வேந்தர்
கோடணி எயிலின் காப்புச் சிறந்து,
ஈண்டு அருங்குரையள், நம் அணங்கியோளே”[1]
அகநானூறு 372, அடி (14-16)

தென்னை மரத்தில் கட்டிப் பலரும் ஆடும் ஊசல் கயிறு முன்னும் பின்னும் சென்று வருந்துவது போல நாம் வருந்துகிறோம். குதிரை மலை அரசன் அஞ்சி பகைவரை வென்று முழக்கிய பெருந்துடியில் போர்த்திய தோல் அடிபட்டு வருந்தியது போல நீ வருந்துகிறாய் என்று காதலியை காண முடியாத தலைவன் வருந்துகிறான்.

5.2 ஆய் அண்டிரன்

வேளிர் குடி வழி வந்தவர்களில் சிறப்புப் பெற்றவன் ஆய் அண்டிரன் ஆவான். இக்குறுநில மன்னன் பொதியை மலையை ஆண்டு வந்தான். கொங்கு நாட்டைத் தனக்குப் பணிய வைத்தான். ஆய் அண்டிரன் சிறந்த பண்பாளன் என்று ஔவையார் பாடியுள்ளார். இவன் ஆண்ட பொதியை மலை, இக்காலத்தில் கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள அகத்தியர் மலையுடன் ஆய்வாளர்களால் அடையாளம் காணப்படுகிறது (“கடையெழு வள்ளல்கள்” – Sangam Literature Facts).

“ஆடு நடைப் புரவியும், களிறும், தேரும்,
வாடா யாணர் நாடும் ஊரும்,
பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்
கோடுஏந்து அல்குல், குறுந்தொடி மகளிரொடு
காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப,
மேலோர் உலகம் எய்தினன்”[2]
புறநானூறு, 240 அடி (1-6)

தன்னைப் பாடிக்கொண்டு வருபவர்களுக்குக் குதிரை, யானை, தேர், நாடு, ஊர் முதலானவற்றை வழங்கியவன் அரசன் ஆய். அவன் தன் மனைவியருடன் மேலோர் உலகம் சென்றுவிட்டான். மரப்பொந்தில் இருக்கும் கூகை 'சுட்டுக் குவி' - என்று சொல்லிக் குழறுகிறது. அவன் உடம்பு சுட்டு எரிக்கப்பட்டது. புலவர்கள் புரவலனைக் காணாமல் தன் நாட்டுக்குத் திரும்புகின்றனர். - புலவர் குட்டுவன் கீரனார் இதனைச் சொல்லிப் பாடுகிறார்.

"நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநாள் அலரின் நாறும்நின்
அலர்முலை ஆகத்து இன்துயில் மறந்தே"[3]
அகநானூறு 69 அடி (17-20)

மோரியர் தேர்ச்சக்கரம் உருள வழி அமைத்துக்கொண்டு தென்னாடு வந்த வழியைக் கடந்து சென்றுள்ளார் என்றாலும் அங்கு நீடித்திருக்க மாட்டார். ஆய் அரசன் காட்டில் முதல் மழை பொழியும்போது பூத்து மணக்கும் மலர் போல் காடு மணக்கும். அந்த இன்பம் பெறப் பொருள் ஈட்ட அவர் சென்றுள்ளார். உன் நினைவில் களவு வாழ்க்கையை மறந்து சென்ற இடத்தில் தங்கமாட்டார். என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

5.3 அதியன்

தமிழகத்தின் வடபகுதியில் பாணன் நாடு உள்ளது. அந்த நாட்டு வழியில் அவர் சென்றுவிட்டார். வானம் வாள் போல் பளபளக்கும் கோடைக்காலத்தில் சென்றுள்ளார். ஆளைக் கொல்லும் யானை இருக்கும் சோலை வழியில் செல்கிறார்.

"ஆடுநடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு
மலைகவின் அழிந்த கனைகடற்று அருஞ்சுரம்"[4]
அகநானூறு 325 அடி (7-10)

அதியன் நாட்டைக் கைப்பற்றிக்கொண்ட அள்ளன் வெற்றிப் பெருமிதம் மிக்கவனாகத் திரிந்தான். அதியன் அள்ளனைத் தாக்கிப் பணியவைத்தான். அப்போது அதியன் வெற்றி முழக்கம் செய்யவில்லை. அவனது ஊதுகொம்பும், முரசும் முழக்கப்படாமல் செயலற்றுக் கிடந்தன. வெள்ளை மணல் குவிந்து, செல்வச் செழிப்புடன் திகழும் நம் வீட்டில் என்னைப் புணரும் வாய்ப்பினை அவர் பெற்றார். அந்தத் திருட்டுத்தனம் ஊர்மக்கள் வாயில் பூத்தது.

5.4 அவியன்

சங்ககால வள்ளல்களில் ஒருவன். மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற்புலவர் இவனது கொடையைப் பாராட்டிப் பாடியுள்ளார். அந்தப் பாடல் புறநானூறு 383-ஆம் பாடலாக உள்ளது. இந்தப் பாடலில் இவன் 'கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன்' என்று இவன் சிறப்பிக்கப்பட்டுள்ளான். புலவர் கோழி கூவும் விடியலில் அவியனின் வாயிலில் நின்றுகொண்டு அவனது பகடுகளை வாழ்த்திப் பாடினார். அவியன் புலவருக்குப் புத்தாடை அணிவித்துப் போற்றினான் அரசன். அவன் அணிவித்த ஆடை பாம்பு உரித்த தோல் போலவும், மூங்கிலில் உரியும் தோல் போலவும் இருந்தது. அந்தப் புலவர்க்கு அவன் ஒருவனின் கொடை போதும். கொடைக்காகப் பிறரை நாடிச் செல்லமாட்டேன் என்று புலவர் பாடுகிறார்.

"நிலைஅரும் பொருட்பிணி நினைந்தனிர் எனினே,
வல்வதாக, நும் செய்வினை! இவட்கே,
களிமலி கள்ளின் நல்தேர் அவியன்
ஆடியல் இளமழை சூடித் தோன்றும்"[5]
அகநானூறு 325 அடி (10-13)

மலைப்பாறைகளைக் கடந்து நெடுந்தொலைவிலிருந்து வரும் புதியவர்களின் வாடும் உயிரைக் காப்பாற்றிய நெல்லி மரத்தில் அமர்ந்துகொண்டு அந்த இணைப் புறாக்கள் ஒன்றை ஒன்று அழைத்து அகவும். அந்த வழியில் சென்று, அங்கே இருந்துகொண்டு, பொருள் ஈட்டிவர நீர் நினைத்தீராயின், நும் செயல் வல்லமை உடையது ஆகட்டும். களிப்பு மிக்க கள்ளூரை ஆளும் அரசன் அவியன் நாட்டில், மழைமேகத்தைச் சூடிக்கொண்டுள்ள மலைப்பிளவில் விளைந்திருக்கும் மூங்கிலில் இரண்டு கணுக்களுக்கு இடையை உள்ள பகுதி போல் அழகு கொண்ட தோளினை உடைய இவள் வாடினால், அந்தத் தோள் வாட்ட நோயைப் போக்கும் மருந்து நீ பொருள் தேடும் நாட்டில் இருக்கிறதா? என்று தோழி கூற்றில் புலவர் நயம்பட கூறுகிறார்.

5.5 எழினி

ஔவையார் தன்னிடமிருந்த மாக்கிணை என்னும் பறையை முழக்கிக்கொண்டு, விடியல் பொழுதில் கொடும்பூண் எழினி வாயிலில் நின்று அவன் புகழைப் பாடினார். பகைவர் கோட்டைகளைக் கைப்பற்றி அவர் நாட்டில் கழுதை ஏர் பூட்டி உழுது வரகும் கொள்ளும் விதைத்தானர். உடனே வெளிவந்த அவன் பாசிவேர் போல் கிழிந்திருந்த ஔவையின் ஆடைக்கு மாற்றாடையாக நுண்ணூல் கலிங்கம் தந்து விருந்து படைத்தானாம். உப்பு வண்டி மேட்டில் ஏறும் போதும் பள்ளத்தில் இறங்கும் மோதும் முன்னும் பின்னும் கவியாமல் இருப்பதற்காக வண்டியில் சேம-அச்சு என்று ஒரு மரத்தைக் கட்டித் தொங்கவிட்டிருப்பர். எழினி ஔவையைச் சேம-அச்சு போல் பேணிவந்தானார். அதியமான் மரபினர் முதன் முதலாகத் தமிழ்நாட்டுக்குக் கரும்புக் கொண்டுவந்து பயிரிட்டனர்.

1. ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேற் கூவிளங்கண்ணி கொடும்பூண் எழினி.

2. போர் வல் யானைப் பொலம்பூண் எழினி என்பவன் தலையாலங்கானப் போரில் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தோற்றோடியவன்.

3. பந்து புடைப்பு அன்ன பாய்பரிக் குதிரை, சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி, கெடலருந் துப்பின் விடுதொழில் முடிமார், கனை எரி நடந்த கல் காய் கானத்து, மறவர்.

4. முனை எழ முன்னுவர் ஓட்டிய முரண் மிகு திருவின், மறம் மிகு தானை கண்ணன் எழினி.

5. மத்தி என்பவன் வேந்தன் ஏவியதன் பேரில் தொலைவிலுள்ள நாட்டுக்குச் சென்று கல்லா எழினி என்பவனின் பல்லைப் பிடுங்கிக் கொண்டுவந்து தன் ஊர் வெண்மணிவாயில் கோட்டைக் கதவில் பதித்துக்கொண்டான்.

6. வாய்வாட் பொய்யா எழினி என்று போற்றப்படும் இவன் நாட்டில் நல்லாட்சி நடத்திவந்தான்.

7. அச்சமின்றிக் காட்டில் தங்கும் வகையில் இவன் குடிமக்களுக்குப் பாதுகாப்பு நல்கிவந்தான். காட்டில் தங்கும்போது கொடிய விலங்கு தாக்காதவாறும், நாட்டிலுள்ள செல்வத்தைப் பகைவர் பறிக்காதவாறும் இவன் பாதுகாப்பு அளித்துவந்தான். இவன் அதியமானின் தகடூரைத் தாக்கியபோது போர்க்களத்திலேயே கொல்லப்பட்டான்.

8. அதியமான் மகன் பொகுட்டு எழினிக்கு இரண்டு பகையாம். ஒன்று அவன் தோளை மகளிர் நோக்கம் தாக்குமாம். மற்றொன்று மற்றவர்களோடு சேர்ந்து மகிழ்ந்து உண்ட கையோடு தாக்கிவிடுவானோ என்று அவன் செல்லும் ஊர்களிலெல்லாம் அவனைப் பகைக் கண்ணோடு பார்ப்பார்கள்.

5.6 திதியன்

திதியன் பொதியமலைப் பகுதியை ஆண்ட அரசன். பொதியமலை அரசன் திதியன் வேற்படையும், தேர்ப்படையும் மிகுதியாக உடையவன். திதியன் பாணர்களுக்குப் பல அணிகலன்களை நல்கி அவர்களுக்கு அறத்துறையாக விளங்கினான். சினங்கெழு திதியன் தலையாலங்கானப் போரில் நெடுஞ்செழியனைத் தாக்கித் தோற்றுப் போனான். புறநானூறு திதியன் சிறப்புக்காக காஞ்சி திணைப்பாடலில் பகைவர் போருக்கு வந்த போது காஞ்சி பூவை சுடிதார் இடத்தை காத்தனர்.

“அவள் வகுத்த பசுங்குடையான்

புதல் முல்லை பூப்பறிக் குந்து

ஆம்பல் வள்ளி கொடிக்கை மகளிர்

குன்றியேறும் புனல் பாயின்”[6]

புறம் 352 அடி (3-6)

அள்ளித் தண்டால் ஆகிய வளையல் அணிந்த மகளிர் அவர் மணல் மலை மீது ஏரி நீரில் விளையாடி பாய்ந்ததால் வெளியே நீர் செல்லும் மகதில் மோதி வலியும் திட்டம் என்பவனின் நெல் வயல்

வேலியாக குறை போன்ற உயர்ந்த அணிகலன்களை தந்தாலும் உயர்ந்த வீரமைந்த தந்தை அவர்களால் சென்றான்.

வாளை மீனை விற்கும் பாண்மகள் மீனுக்கு விலையாக நெல்லைக் கொடுத்தால் வாங்கமாட்டாள். முத்துக்களையும், அணிகலன்களையும் மட்டுமே பெறுவாள். இப்படிப் பாண்மகள் வாழும் நாட்டு எவ்வி அரசன் கூறிய அறிவுரையை மதிக்காமல் அரசன் அன்னி போரிட்டான். திதியன் என்னும் அரசனின் காவல் மரம் புன்னையை வெட்டிக்கொண்டு வரப் போரிட்டு மாண்டு போனான். நீ ஐம்பால் குறுமகளை விரும்பி அன்னி போல் எண்ணம் நிறைவேறாமல் சாக வேண்டியது தான். தலைவன் தன் நெஞ்சோடு பேசுகிறான்.

"திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவைகொல்லோ, நீயே கிளி எனச்
சிறிய மிழற்றும் செவ் வாய், பெரிய
கயல் என அமர்த்த உண்கண், புயல் எனப்
புறம் தாழ்பு இருளிய பிறங்கு குரல் ஐம்பால்,
மின் நேர் மருங்குல், குறுமகள்
பின்னிலை விடாஅ மடம் கெழு நெஞ்சே?"
அகநானூறு 126 அடி (16-22)

திதியன் ஆட்சி சிறப்பினை உணர முடிகிறது.

5.7 நன்னன் சிறப்பு

பழுமரம் நாடிச் செல்லும் பறவைகள் போல் வள்ளல்களை நாடிப் பரிசில் பெற்று மகிழ்வோடு திரும்பிய பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியரும் தம்மைஒத்த கலைஞர்கள் எதிர்ப்பட்டபோது அன்னோரும் தாம் பெற்ற இன்பத்தைப் பெறவேண்டுமென்று விழைந்து தமக்குப் பரிசில் நல்கிய வள்ளல்களை அடைவதற்குரிய வழியையும் பாராட்ட வேண்டிய முறைகளையும் பரிசில் நல்கும் பான்மையினையும் பிற செய்திகளையும் எடுத்துக் கூறுவது வழக்கம். பகைவர் பலரையும் புறங்கண்டு அவர் திறையாகத் தரும் பொருளை வரையாமல் புலவர்க்கு வழங்கும் வண்மைச் சிறப்பும் தன்னை இகழ்வாரைத் தன் ஆட்சியில் அகப்படுத்தும் அறிவாற்றலும் தன்னைப் புகழும் தான் வென்ற பகைவருடைய அரசு முழுதும் கொடுத்தும் அமையாத உள்ளத்தோடு பருவமழை பொழிவதைப் போல் பின்னரும் மாறாமல் சொரியும் அவன் நல்ஒழுக்கச் சிறப்பும் கொண்டவன் நன்னன் ஆவான்.

உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ,
வேறு வேறு கம்பலை வெறி கொள்பு மயங்கி,
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு

முந்தை யாமம் சென்ற பின்றை,

மதுரைக்காஞ்சி - அடி (615-620)

குடியிருப்புகள் தோறும், உரைகளும் பாட்டுக்களும் கூத்துக்களும் கலந்து, வெவ்வேறு ஒலிகள் ஒழுங்கு கொண்டு கலந்து, பெரும்புகழ் பெற்ற நன்னனின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற குடியிருப்புகளில் உள்ளவர்கள் விழாக்களில் உள்ள ஆரவாரம் போன்று திகழும் அவ்வூர்.

நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்,

தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த

பொன்னினும் அருமைநற்கு அறிந்தும், அன்னோள்

அகநானூறு- 258 அடி(1-3)

நன்னன் உதியன் என்பவன் பாழி என்னும் மலைக்காட்டில் இருந்த பாழி என்னும் ஊரில் இருந்துகொண்டு ஆண்ட அரசன். வேளிர் குடியினரில் தொன்மையான குடியினர் தன் பொன்னை அந்தப் பாழி நகரில் பாதுகாப்பாக வைத்திருந்தனர். அதனை யாரும் கைப்பற்ற முடியாது.

5.8 அதியமான் நெடுமான் அஞ்சி

அஞ்சியின் வீரமும், கொடைச் சிறப்பும் ஔவையார் புலவரின் பாடல் கருப்பொருட்களாக உள்ளன. திண்மையான உடல்வலி பொருந்தியவன் என்றும்; சேரன் சோழன், பாண்டியன் உட்பட்ட ஏழு அரசர்களை எதிர்த்து நின்று வென்றவர் என்றும் புலவர்கள் இவனைப் புகழ்ந்து பாடுகின்றனர். இவனது அரண்மனைக்கு இல்லையென்று வருவோர்க்கு அடையாத வாயிலைக் கொண்டது என்றும், அவரது கைகள் மழையைப் போல் ஈயும் தன்மையது என்றும் பாடல்கள் அவரைப் புகழ்கின்றன. தனக்குக் கிடைத்த சாவா மருந்தாகிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்தார் என்றும் அவரது கொடையின் திறம் பேசப்படுகிறது. இவன் ஆண்ட தகடூர் நகரம் இக்காலத்தில் தர்மபுரி எனும் பெயரில் அறியப்படுகிறது ("கடையெழு வள்ளல்கள்" – Sangam Literature Facts).

ஊர்க் குறுமாக்கள் வெண் கோடு கழாஅலின்,

நீர்த் துறை படியும் பெருங் களிறு போல

இனியை, பெரும! எமக்கே; மற்று அதன்

துன் அருங் கடாஅம் போல

இன்னாய், பெரும! நின் ஒன்னாதோர்க்கே.

புறநானூறு பாடல் எண். 94

பெரும! நீ, நீர்த்துறையில் படிந்திருக்கும் யானை அதன் மீது ஊர்ந்து வந்து அதன் கொம்புகளைக் கழுவும் மக்களுக்கு அடங்கிக் கிடப்பது போல எம்போன்ற பாணர்க்கும் புலவர்க்கும் இனிமை

தருபவன். உன் பகைவர்க்கு அந்த யானையின் மதநீர் போலக் கொடுமையானவன். துறை அரச வாகை. அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியுள்ளார்.

அரசன் அதிகன் (அதியமான்) சொன்ன சொல் தவறாதவன். இரவலர் எண்ணிவந்த பொருள்களை எல்லாம் வழங்குபவன். காலில் வீரக்கழல் அணிந்தவன். அவன் நாட்டில் மலை. வேங்கைமரம் மிகுந்த மலை. கொள்ளக் குறையாத பலாப்பழம் மிக்க மலை. பசும்பூண் பாண்டியன் அவனது அந்த மலையில் தன் படையை நடத்தினான். அவன் மலையிலிருந்து அருவி கொட்டிற்று. அந்த அருவியிலும், அவன் மலையிலும் நடமாடும் சூரர மகளிர் போல இவள் எனக்குக் கிடைத்தற்கு அரியவள். கொள்ளக் குறையாத கடல். சங்குப் பூச்சிகள் வளரும் கடல். அளக்க முடியாத கடல். நீரைக் கொண்டு செல்லும் மேகங்கள். விரிந்த வானத்தில் நெருப்புக்கொடி பறப்பது போல் மின்னல். உருமும் இடி. ஓசையுடன் மழை. இடைவிடாமல் வானம் உமிழும் மழை. என்று அகநானூறு பாடலில்

நல்லிசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்
கோள்அறவு அறியாப் பயம்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய, 20
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்
களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர
ஔிறுவன இழிதரும் உயர்ந்துதோன்று அருவி
அகநானூறு (162) அடி(17-23)

தலைவன் தன் நெஞ்சோடு பேசுகிறான். பொருள் தேடச் செல்ல உள்ள நிலையில் கூறுவதாக அமைந்துள்ளது.

5.9 ஆதன் எழினி

ஆதன் எழினி செல்லியின் அரசன். ஆதன் என்னும் பெயர் பூண்ட பெருமக்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தனர். சங்ககாலத்துச் செல்லூர் செல்லி எனவும் வழங்கப்பட்டது. செல்லிக் கோமான் எனப் போற்றப்படும் ஆதன் எழினியின் மார்பில் யானை குத்தியது. அதனால் அவனுக்கு ஒன்றும் நேரவில்லை. குத்திய யானைதான் துன்பப்பட வேண்டியதாயிற்று என ஐயூர்முடவனார் அகநானூறு பாடல் 216 இல் ஆதன் எழினியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கடலில் விளையாடும் மகளிர் ஞாழல் பூக்களைப் பறிப்பர். கழனியில் பாடுபடும் உழவர் குவளைப் பூக்களைக் களையாகக் களைந்து எறிவர். முல்லைநில மக்கள் முல்லைப் பூக்களைப் பறிப்பர்.

கழனி உழவர் குற்ற குவளையும்,
கடி மிளைப் புறவின் பூத்த முல்லையொடு,
பல் இளங் கோசர் கண்ணி அயரும்,

மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்

எறிவிடத்து உலையாச் செறி சுரை வெள் வேல்

ஆதன் எழினி அரு நிறத்து அழுத்திய

பெருங் களிற்று எவ்வம் போல,

வருந்துபமாது, அவர் சேரி யாம் செலினே.

அகநானூறு (216) அடி(11-18)

இந்த மூவகைப் பூக்களையும் சேர்த்துக் கோசர் குடிமக்கள் மாலையாகத் தொடுத்து அணிந்துகொள்வர். செல்லிக்கோமான் எறிந்த வேல் ஆதன் எழினியின் மார்பில் பாய்ந்தது. ஆதன் எழினி வருந்தினான். பரத்தை சொல்கிறாள். நான் ஊரன் மனைவி வாழும் தெருவுக்குச் சென்றால், ஊரன் மனைவி ஆதன் எழினி போல் புண்பட்டு வருந்தவேண்டிய நிலை இருக்கும்.

5.10 எவ்வி

எவ்வி சங்ககாலத்துக் குறுநில மன்னன். இவன் சிறந்த வள்ளலும் ஆவான். எவ்வி என்னும் சொல்லின் பொருள் ஆற்றில் ஓடும் நீரை மேட்டுநிலங்களுக்குப் பாய்ச்ச ஏற்றத்தைப் பயன்படுத்துவர். அந்த ஏற்றத்தைக் குறிக்கும் சொல் எவ்வி. ஏற்றம் போல் மக்களை ஈடேற்றுபவன் என்பது இவனது பெயருக்கு உள்ள விளக்கம். உண்மையில் இந்த அரசன் தன் பெயர் தரும் விளக்கத்துக்கு ஏற்ப விளங்கியதை இவனது வரலாறு காட்டுகிறது. எவ்வியை நேரில் கண்டு பாடிய புலவர் வெள்ளெருக்கிலையார். பிற புலவர்கள் இவனைத் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இவனது ஆட்சி நிழல் குளுமையாக இருக்கும் என்றும், இவனது நாட்டு முதியவர்கள் உப்பு விற்க வரும் நுளையர்களுக்குத் தேறல் தந்து மகிழ்விப்பார்கள் என்றும் ஒரு புலவர் குறிப்பிடுகிறார். இதனால் இவனது நாட்டு மக்களும் வள்ளண்மைக் குணம் மிக்கவர்கள் எனத் தெரியவருகிறது.

பாண்மகள் எவ்வி நாட்டில் தன் உப்புக்குப் பண்டமாற்றாக நெல்லைத் தந்தால் வாங்கமாட்டாளாம். முத்துக்களைத் தந்தால்தான் வாங்கிக்கொள்வாளாம். அந்த அளவுக்கு அவன் நாடு செல்வ வளம் மிக்கது. கபிலர் (புறம் 202), குடவாயிற் கீரத்தனார் (அகம் 366), நக்கீரர் (அகம் 126), பரணர் (குறுந்தொகை 19, அகம் 266), மாங்குடி கிழார் (புறம் 24), மாமூலனார் (அகம் 115), வெள்ளெருக்கிலையார் (புறம் 233, புறம் 234) ஆகிய பல புலவர்களும் எவ்வியைப் பாடியுள்ளனர்.

பரத்தையிடமிருந்து வந்த கணவனை மனைவி ஏற்றுக்கொள்ளும் பாங்கு. கரை உச்சியைத் தொடுமாறு பெருகி வந்த வெள்ளத்துக்கு அந்திவிழா எடுத்து வழிபட்டுக்கொண்டு, அந்த நீர்ப்பரப்பில் நேற்று நீ விளையாடினாய். யானை போல் நீராடினாய். முன்புறமாக உந்தும் தலைப்புணை மேல் ஏறிக்கொண்டு நீராடினாய். துணையாக, நரந்தம் பூசி மணக்கும் கூந்தலை உடைய இளம்பெண்களைச் சேர்த்துக்கொண்டு நீராடினாய். அவளை ஈரமாக்கி, கலவியுடன் நீராடினாய். அவள்மீது நீரைத் தெளித்து விளையாடியபோது அவளது அழகிய கண்களைப் பார்க்கப் பார்க்க ஆசை

மேலிட்டு தவிர்க்காமல் மீண்டும் மீண்டும் நீராடினாய். நாணம் இல்லாமல் நீராடினாய் என்றெல்லாம் கூறுகின்றனர்.

வாய் வாள் எவ்வி ஏவல் மேவார்

நெடு மிடல் சாய்த்த பசும் பூண் பொருந்தலர்

அரிமணவாயில் உறத்தூர் ஆங்கண்,

கள்ளுடைப் பெருஞ் சோற்று எல் இமிழ் அன்ன,

கவ்வை ஆகின்றால் பெரிதே

அகநானூறு (266) அடி(12-16)

நீடூர் யாழிசை கேட்கும் தெருக்களைக் கொண்டது. அதன் அரசன் எவ்வி. இவன் வாள் வீச்சில் வல்லவன். இவன் ஏவியபடி பசும்பூண் என்னும் அடைமொழி கொண்ட வேந்தனின் பகைவர்கள் நெடுமிடல் என்பவனை கொன்றுவிட்டு, அரிமணவாயில் (அரிமழம், இக்கால ஊர்) ஊரை அடுத்த உறத்தூர் என்னுமிடத்தில் கள்ளும் சோறும் உண்டு களித்திருந்தனர். இந்தக் களிப்பு ஆரவாரம் போல, ஊர் உன்னைப் பற்றி அலர் தூற்றுகிறது.

5.11 ஓரி

வல்வில் ஓரி சிலை, திருவேசுவரர் ஆலயம், சிங்களாந்தபுரம். நாமக்கல் மாவட்டம் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான ஓரி சிறந்த வில்லாளி. கொல்லிமலைக்கும் அதைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். இவர் வல்வில் ஓரி எனவும் ஆதன் ஓரி எனவும் அழைக்கப் பெறுவார். தமிழகத்தின் கொல்லிமலைப்பகுதியில் ஆண்டுதோறும் வல்வில் ஓரியின் நினைவாக திருவிழா கொண்டாடப்படுகிறது. ஒரு முறை வல்வில் ஓரி ராசபுரம் என்னும் பகுதியில் (தற்போது இராசிபுரம்) வேட்டையாட செல்லும் போது அங்கு ஒரு பன்றியின் மீது அம்பினை செலுத்த, அப்பன்றியானது ஒரு புதரில் போய் மறைந்து விட, அந்த இடத்தில் வல்வில் ஓரி சென்று பார்க்கும் போது அங்கு பன்றிக்கு பதிலாக ஒரு சிவலிங்கமும், அச்சிவலிங்கத்தின் மீது வல்வில் ஓரி எய்த அம்பும், அந்த அம்புபட்டதால் அந்த சிவலிங்கத்தில் ரத்தமும் கசிந்தது. இதைக் கண்ட ஓரி சிவன் தான் தன்னை பன்றி வடிவில் வந்து சோதித்ததாக எண்ணி அவ்விடத்திலேயே சிவபெருமானுக்கு ஸ்ரீ கைலாச நாதர் திருக்கோயில் என்ற பெயரில் ஆலயம் எழுப்பினான்.

நாணுவரை நில்லாக் காமம் நண்ணி

நல்கினள், வாழியர், வந்தே- ஓரி

பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லிக்

கார்மலர் கடுப்ப நாறும்,

ஓர்நுண் ஓதி மாஅ யோளே!

அகநானூறு (208) அடி (20-24)

அரசன் ஆய்எயினன் சிறந்த வள்ளல். வேளிர் குடி மகன் என்பவனின் மகன். தேமுது குன்றம் அவன் நாடு. கையில் சிறிய கோலை வைத்துக்கொண்டு குறி சொல்லும் குறிக்கக்காரர்கள் அவன் குன்றத்தைச் சிறப்பித்துப் பாடுவர். யாமத்து இரவாயினும் சரி. அவர்கள் பாடினால் அவர்களுக்குத் தந்தம் கொண்ட யானையைப் பரிசாக நல்குவான் பாழி என்னும் ஊரில் எயினன் பறவைகளைப் பேணி வளர்த்துவந்தான்.

அந்த ஊர் பறந்தலை என்னும் போர்க்களமாக மாறியது. மிஞிலி அவனைத் தாக்கினான். யானைப் படையும் தேர்ப் படையும் கொண்டு தாக்கினான். எயினன் வாளேந்திப் போரிட்டான். நண்பகல் வேளையில் பெருங்காயம் பட்டுப் போர்க்களத்தில் எயினன் வீழ்ந்தான். அவன் பேணிவந்த பறவைகள் வானத்தில் பறந்து வெயில் அவன்மேல் படாமல் சிறகுகளை விரித்து நிழல் செய்தன. "இந்தக் காட்சியை நான் காணமாட்டேன்" என்று சொல்லிவிட்டான்.

இந்த நன்னன் போரை மூட்டியவன் உருவினை. போர்க்களத்துக்கு வரவில்லை. எயினன் மேல் அருளும் காட்டவில்லை. ஒளிந்துகொண்டான். இதனால் பதைபதைத்துப் போன பெருவிதுப்பு அகுதை அரசனிடம் முறையிட்டுக் கொண்டனர். செம்பூ மாலை அணிந்த மார்பில் அடித்துக்கொண்டு முறையிட்டுக் கொண்டனர். வேளிர்க்கு நேர்ந்த பழியைப் போக்கும் வகையில் அகுதை பெரும்படையுடன் சென்று நன்னனைப் பழிவாங்கினான். அகுதை வேள்மகளிர் துன்பத்தைப் போக்கியது போல என் காதலி என் துன்பத்தைப் போக்கினாள். உப்பால் கரை போட்டு வெள்ளத்தைத் தடுக்க முடியாது அப்படித்தான் அவளது காமத்தை அவளது நாணத்தால் தடுக்க முடியவில்லை. ஓரி அரசனின் கொல்லிமலை பலாப்பழம் மிக்கது. அங்கே காந்தள் பூக்கள் கார்மலர் மணம் கமழும். அந்த மணம் தன்மேல் கமழும் மேனியை உடையவள் அந்த மாயோள். அந்த மாயோள் தன்னை எனக்குத் தந்தாள். என்று தன் காதலியை எண்ணிப்பார்த்தான் தலைவன்.

ஓரி ஆண்ட கொல்லிமலைப் பகுதி இன்று நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது என்பதும், அங்கு ஆண்டுதோறும் இவனது நினைவாக விழா கொண்டாடப்படுகின்றது என்பதும் இவனது நாட்டுப்புற வழிபாட்டு மரபு இன்றளவும் தொடர்வதைக் காட்டுகிறது ("கடையெழு வள்ளல்கள்" – தமிழ் விக்கிப்பீடியா).

6. கடையெழு வள்ளல்கள்: விரிவான ஒப்பீட்டுப் பார்வை

அகநானூற்றில் விரிவாகக் குறிப்பிடப்படும் வேளிர் குடி மன்னர்களுள் பெரும்பாலோர் பிற்காலத்தில் "கடையெழு வள்ளல்கள்" என வழங்கப்படும் ஏழு பெரும் கொடையாளிகளுள் அடங்குவர். பாரி, காரி, ஓரி, ஆய், அதியமான், பேகன், நள்ளி ஆகிய இந்த ஏழு வள்ளல்களும் தத்தமது மலைநாடுகளை ஆண்டு, பொருள் வேறுபாடின்றி வறியவர்க்கும் புலவர்க்கும் வழங்கிய கொடைச்செம்மல்கள் என்று தமிழ் மரபு போற்றுகின்றது ("கடையெழு வள்ளல்கள்" – தமிழ் விக்கிப்பீடியா). பாரி பறம்பு மலையை

(இன்றைய பிரான்மலை) ஆண்டு, முல்லைக் கொடிக்குத் தன் தேரையே அளித்த வரலாறு புகழ் பெற்றது; காரி திருக்கோவிலூரை மையமாகக் கொண்டு ஈரநன்மொழி பேசும் பண்பாளனாகத் திகழ்ந்தான்; பேகன் பொதினி மலையை (இன்றைய பழநி) ஆண்டு, மழையில் நனையும் மயிலுக்குப் போர்வை அளித்த கதை மூலம் நினைவுகூரப்படுகிறான்; நள்ளி நீலகிரிப் பகுதியை (கண்டீர நாடு) ஆண்டவன் ("பழநியில் வள்ளல் பேகன் வாழ்ந்த வைகாவி நாடு"; "கடையெழு வள்ளல்கள்" – Sangam Literature Facts). இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ள ஆய் அண்டிரன், அதியமான் நெடுமான் அஞ்சி, ஓரி ஆகியோரும் இந்த ஏழு வள்ளல்களுள் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. அகநானூற்றுப் பாடல்கள் இவர்களின் அகவாழ்வு தொடர்பான குறிப்புகளையும், புறநானூற்றுப் பாடல்கள் இவர்களது கொடைப் பண்பையும் தனித்தனியே பதிவு செய்துள்ளமை, சங்க கால புலவர் மரபு ஒரே மன்னனை பல கோணங்களில் அணுகி பாடியிருந்தமையை உணர்த்துகிறது.

கடையெழு வள்ளல்கள் ஏழு பேரும் தனித்தனி மலைப் பகுதிகளை ஆண்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது — பாரி (பறம்பு மலை), பேகன் (பொதினி/பழநி மலை), ஆய் (பொதிகை மலை), ஓரி (கொல்லி மலை), நள்ளி (நீலகிரி), அதியமான் (தகடூர்/தர்மபுரி), காரி (திருக்கோவிலூர்) என மலைவழி அரசுகளாக அவை அமைந்திருந்தன ("கடையெழு வள்ளல்கள்" – Sangam Literature Facts). மலைநாடுகளை மையமாகக் கொண்ட இந்த அரசியல் அமைப்பு, சிறு அரசுகள் இயற்கை அரணைப் பயன்படுத்திப் பாதுகாப்பு பெற்ற உத்தியையும், விவசாயம் மற்றும் வனவளம் சார்ந்த பொருளாதார சுயசார்பையும் காட்டுகிறது. இதே போன்று, திதியன், அதியன், எழினி, எவ்வி முதலிய குறுநில மன்னர்களும் தத்தம் நாடுகளின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியிருந்தமையை அகநானூற்றுப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

7. குறுநில மன்னர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பங்களிப்பு

அகநானூறு வழி கிடைக்கும் வரலாற்றுத் தரவுகளை ஒப்பிட்டு நோக்கும் ஆய்வாளர்கள், எட்டுத்தொகை நூல்களுள் வரலாற்றுச் செய்திகளை மிக அதிகமாக உள்ளடக்கியது அகநானூறே எனக் குறிப்பிடுகின்றனர் (சியாமளா). மூவேந்தர்கள் தொடர்பான குறிப்புகளுடன், குறுநில மன்னர்கள் தொடர்பான குறிப்புகளும் இணைந்து சங்ககால அரசியல் வரலாற்றை மறுகட்டமைக்க உதவுகின்றன. திதியன், அதியன், எழினி முதலான மன்னர்களுக்கிடையே நிகழ்ந்த போர்கள், நன்னனுக்கும் எயினனுக்கும் இடையிலான போட்டி, அகுதையின் பழிவாங்கும் பயணம் ஆகியவை, குறுநில மன்னர்களிடையே நிலவிய அரசியல் மோதல்களையும் கூட்டு நடவடிக்கைகளையும் வெளிப்படுத்துகின்றன.

பொருளாதார நோக்கில் நோக்கும்போது, ஆய் அண்டிரன், அதியமான் ஆகியோர் புலவர்களுக்கு யானை, குதிரை, தேர், நாடு, ஊர் ஆகியவற்றை வழங்கிய செய்திகள், குறுநில மன்னர்களின் வளமான

பொருளாதார ஆதாரங்களை உணர்த்துகின்றன. எவ்வி, திதியன் ஆகியோரது நாடுகளில் முத்துக்களும் நெல் விளைச்சலும் ஒருங்கே சிறந்திருந்தமை, மலை-கடல் இணைந்த வளமான நிலவியலமைப்பைச் சுட்டுகிறது. பண்பாட்டு நோக்கில், ஔவையார், நப்பசலையார், ஐயூர்முடவனார் உள்ளிட்ட பலரும் இம்மன்னர்களைப் பாடியிருத்தல், சங்ககால அவைக்களப் பண்பாட்டில் பெண் படைப்பாளிகளுக்கும் இடம் இருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும், ஓரியின் கொல்லிமலைத் திருவிழா மரபு போன்று, குறுநில மன்னர்கள் தொடர்பான நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தமிழகத்தின் பல பகுதிகளில் தொடர்வது, அகநானூற்றுச் செய்திகளின் வரலாற்று நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

8. முடிவுரை

வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். கடையெழு வள்ளல்கள் குறுநில மன்னர்களாயினும், வரையாது பொருள் வழங்கும் இயல்பினர். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய வல்லகலாக இருந்தனர். மன்னர்களின் இத்தகைய விருந்தோம்பல், புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. வாழ்க்கை நிலையில்லாதது, செல்வமும் நிலையில்லாதது என்ற நிலையாமை உணர்ந்து வாழ்ந்தனர். குடிமக்களைப் பசி, பிணி ஆகியவற்றினின்று பாதுகாத்தலும், கொடுங்கோலன் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சியும் மன்னர்கள் ஆட்சி நடத்தினார்கள்.

9. தொகுப்புரை

அகநானூற்று பாடல்கள் மூவேந்தர்களைப் போன்று குறுநில மன்னர்கள் சிறப்புற ஆட்சி செய்த மையையும் அவர்கள் கொடைத்தன்மை உடையவர்களாக திகழ்ந்தமையையும் இக்கட்டுரை நன்கு எடுத்து இயம்பியுள்ளது. குறுநில மன்னர்கள் வாழ்ந்த ஊரில் வளமான முறையில் மலைப்பகுதிகள் இருப்பதால் வளம் மிக்க நகரங்கள் மற்றும் கோட்டைகள் சூழ்ந்து சிறப்பு மக்கள் வாழ்ந்தனர் என்று அகநானூற்று பாடல் வெளிக்காட்டுகின்றன. இலக்கியங்கள் கலைகள் பண்பாட்டு சிந்தனை போன்றவற்றை போற்றி வளர்த்த கொடையாளிகளாக குறுநில மன்னர்கள் வாழ்ந்தனர். மேலும் அவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு வகையான திணை கரும்பு நெல் போன்றவற்றை பயிரிட்டு பாதுகாத்து வளர்த்தனர். வலிமை வீரமிக்கவர்களாக சிறந்து விளங்கியதை இக்கட்டுரை நன்கு எடுத்து இயங்கியுள்ளது. இறுதியாக, கடையெழு வள்ளல்கள் மரபு, வேளிர் குடித்தோற்ற வரலாறு, மற்றும் அகநானூற்றில் பதிவாகியுள்ள பதிற்றுவர் குறுநில மன்னர்களின் வாழ்வியல் ஆகியவை இணைந்து, சங்ககால அரசியல் அமைப்பில் மூவேந்தர்களுக்கு நிகராகக் குறுநில மன்னர்கள் வகித்த முக்கிய பங்கை இக்கட்டுரை உறுதிசெய்கின்றது.

சான்றெண் விளக்கம்

1. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 372 அடி (14-16)
2. ஔவை துரைசாமிப் பிள்ளை – புறநானூறு – பா.எ. 241 அடி (1-6)
3. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 69 அடி (17-20)
4. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 325 அடி (7-10)
5. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 325 அடி (10-13)
6. ஔவை துரைசாமிப் பிள்ளை – புறநானூறு – பா.எ. 352 அடி (3-6)
7. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 126 அடி (16-22)
8. ஞா. மாணிக்கவாசகன் – மதுரைக்காஞ்சி – அடி (615-620)
9. ஔவை துரைசாமிப் பிள்ளை – புறநானூறு – பா.எ. 94
10. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 162 அடி (17-23)
11. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 216 அடி (11-18)
12. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 266 அடி (12-16)
13. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் – அகநானூறு மூலமும் உரையும் – பா.எ. 208 அடி (20-24)

துணைநின்ற நூல்கள் / Works Cited (MLA 9th Edition)

[1.] "அகநானூறு." தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 2 ஆகஸ்ட் 2025, ta.wikipedia.org/wiki/அகநானூறு. Accessed 3 Sept. 2026.

[2.] "கடையெழு வள்ளல்கள்." Sangam Literature - Facts, WordPress, 9 நவம்பர் 2019, sangamliteraturefacts.wordpress.com/கடையெழு-வள்ளல்கள். Accessed 3 Sept. 2026.

[3.] "கடையெழு வள்ளல்கள்." தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 9 டிசம்பர் 2025, ta.wikipedia.org/wiki/கடையெழு_வள்ளல்கள். Accessed 3 Sept. 2026.

[4.] சியாமளா, ம. "அகநானூற்றில் வரலாற்றுச் செய்திகள்." Geotamil, 28 ஜூன் 2023, www.geotamil.com/index.php/2021-02-10-13-39-56/7990-2. Accessed 3 Sept. 2026.

[5.] "சங்ககால வள்ளல்கள்." தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 12 நவம்பர் 2019, ta.wikipedia.org/wiki/சங்ககால_வள்ளல்கள். Accessed 3 Sept. 2026.

[6.] ஞா. மாணிக்கவாசகன். மதுரைக்காஞ்சி. 3rd ed., உமா பதிப்பகம், 2016.

[7.] "பழநியில் வள்ளல் பேகன் வாழ்ந்த வைகாவி நாடு." தினமலர், www.dinamalar.com/news/tamil-nadu-district-news-dindigul/news/2938945. Accessed 3 Sept. 2026.

[8.] “புறநானூறு.” தமிழ் விக்கிப்பீடியா, Wikimedia Foundation, ta.wikipedia.org/wiki/புறநானூறு. Accessed 3 Sept. 2026.

[9.] “வேளிர்களின் பூர்விகம்.” வரலாற்றுத் துளிகள், 21 மே 2014, 365tamilhistorynotes.wordpress.com/2014/05/21/velir. Accessed 3 Sept. 2026.

[10.] ஔவை துரைசாமிப் பிள்ளை. புறநானூறு. கழக வெளியீடு, 1949.

[11.] ச.வே. சுப்பிரமணியன். அகநானூறு மூலமும் உரையும். மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கார் தெரு, பாரிமுனை, சென்னை 600108.

ஆசிரியர் அறிவிப்பு (Author's Declaration – Conflict of Interest)

இக்கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் உள்ளடக்கம் தொடர்பாக எவ்வித தனிநல முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என்று உறுதி அளிக்கின்றார். இக்கட்டுரை எவ்வித வெளிநிறுவன நிதி உதவியையும் பெறாமல், முழுக்க முழுக்க ஆசிரியரின் சொந்த ஆய்வு முயற்சியின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆய்வுத் தரவுகளும் உரிய இடங்களில் குறிப்பிடப்பட்டு, MLA 9-ஆம் பதிப்பு முறையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

KALANJIYAM